# நமது தின கனி

காலை நாளிதழ்

NAMADHU DHINA KANI Daily Morning

| Vol : 01 | Issue : 79 | 4 Pages | 21.10.2023 | Saturday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 79 | 4 பக்கங்கள் | 21.10.2023 | சனிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


# பங்காரு அடிகளார் உடலுக்கு அஞ்சலி செலுத்தினார்: முதல்வர் மு.க.ஸ்டாலின்



சென்னை, அக். 21

ஆன்மிகப் பணியாற்றி வந்த பங்காரு அடிகளார் கடந்த ஓர் ஆண்டாகவே உடல்நலம் பாதிக்கப்பட்டு இருந்தார்.

கோவில் வளாகத்தில் உள்ள வீட்டில் இருந்தபடியே அவர் மருத்துவ சிகிச்சை பெற்று வந்தார். இந்த நிலையில், நேற்று மாலை 5 மணி அளவில் பங்காரு அடிகளார் மாரடைப்பால் மரணம் அடைந்தார். அவருக்கு வயது 82.

அவரது மரணச் செய்தியை அறிந்து பக்தர்கள் மேல்மருவத்தூரில் குவிந்து வருகிறார்கள். அவரது உடல் பொதுமக்கள் அஞ்சலிக்காக, அவரது வீட்டில் வைக்கப்பட்டு இருக்கிறது. அவருக்கு பக்தர்கள் கண்ணீர் அஞ்சலி செலுத்தி வருகிறார்கள்.

பங்காரு அடிகளாரின் இறுதிச்சடங்கு இன்று மாலை நடக்கிறது. அவரது உடல் அடக்கம் அரசு மரியாதையுடன் நடைபெறும் என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அறிவித்து இருக்கிறார்.

இந்நிலையில் மேல்மருவத்தூர் பங்காரு அடிகளார் உடலுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் இன்று நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார். மேலும் அவரது மனைவி மற்றும் குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். உடன் அமைச்சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, தா.மோ. அன்பரசன் உள்ளிட்டோரும் அஞ்சலி செலுத்தினர்.

# மாநில அளவிலான தடகள போட்டியில் பங்கேற்க அவிநாசி அரசு பள்ளி மாணவர்கள் தேர்வு

அவிநாசி, அக். 21

மாவட்ட அளவிலான கபடி போட்டி, திருப்பூர் அருகே பொங்கலூர் அரசு உதவி பெறும் பள்ளியில் புதன்கிழமை நடைபெற்றது.

இதில் 17 வயதுக்கு உள்பட்டோர் பிரிவில் அவிநாசி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் வெற்றிபெற்று மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு பெற்றனர். மேலும் மாவட்ட அளவிலான தடகளப் போட்டியில் 19 வயதுக்கு உள்பட்ட பிரிவில் மாணவர்கள் யாகவராஜ், கவின் ஆகியோர் வெற்றி பெற்று மாநில அளவிலான தடகளப் போட்டியில் பங்கேற்கவுள்ளனர்.

வெற்றிபெற்ற மாணவர்கள், உடற் கல்வி ஆசிரியை கவிதா உள்ளிட்டோருக்கு தலைமையாசிரியர் ஆனந்தகுமாரி, ஒன்றியக் குழு உறுப்பினர் கார்த்தி, உதவித் தலைமையாசிரியர்கள், ஆசிரியர்கள் உள்ளிட்டோர் வாழ்த்துத் தெரிவித்தனர்.

# மின்வாரிய ஊழியர் வீட்டில் திருடிய 3பேர் கைது



அவிநாசி, அக். 21

சேவூர் போலீசார் அவிநாசி சாலையில் வாகனச் சோதனையில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அந்த வழியாக சந்தேகப்படும் வகையில் வந்த இரு நபர்களை பிடித்து விசாரணை மேற்கொண்டனர்.

விசாரணையில் அவர்கள், நாகப்பட்டினம் மாவட்டம், தரங்கம்பாடி பகுதியை சேர்ந்த செல்வம் மகன் வினோத்குமார் (வயது 29), தூத்துக்குடி மாவட்டம், கொங்கராயன்குறிச்சி பகுதியைச் சேர்ந்த நடராஜன் மகன் அருள்ராஜ் (27) என்பது தெரியவந்தது. கட்டடத் தொழிலாளிகளான இவர்கள் தனது நண்பருடன் சேர்ந்து கடந்த 2 நாள்களுக்கு முன்பு சேவூர் அருகே அ. குரும்பபாளையம் கிரீன் கார்டன் பகுதியில் வசித்து வரும் மின்வாரிய பணியாளரான ஜெயபாரதி என்பவரது வீட்டின் பூட்டை உடைத்து 10 பவுன் நகைகள், 400 கிராம் வெள்ளிப் பொருள்கள், ரூ.10 ஆயிரம் ரொக்கம் ஆகியவற்றை திருடிச் சென்றது தெரியவந்தது. இதில் நாகப்பட்டினம் மாவட்டம், வழுவாகுடியைச் சேர்ந்த கலியபெருமாள் மகன் பிரகாஷுக்கும் (39) தொடர்பு இருப்பது விசாரணையில் தெரியவந்தது. இது குறித்து சேவூர் போலீசார் வழக்குப் பதிவு செய்து 3 பேரையும் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து 10 பவுன் நகைகள், 400 கிராம் வெள்ளிப்பொருட்கள் ஆகியவை பறிமுதல் செய்யப்பட்டன.

# ஆயுத பூஜை தீபாவளி கூட்ட நெரிசல் திருப்பூரில் போலீசார் தீவிர கண்காணிப்பு



திருப்பூர், அக். 21

வருகிற 23ந்தேதி சரஸ்வதி பூஜை கொண்டாடப்படுகிறது. மேலும் தீபாவளி பண்டிகை நெருங்கி உள்ளது. இதனால் வார இறுதி நாட்கள் மற்றும் தினமும் மாலை நேரங்களில் ஜவுளி உள்ளிட்ட பொருட்களை வாங்குவதில் மக்கள் மும்முரம் காட்டி வருகின்றனர்.

இதன் காரணமாக திருப்பூர் மாநகரில் பிரதான சாலைகளான புது மார்க்கெட் வீதி, குமரன் ரோடு, காதர் பேட்டை, பி.என்., ரோடு, பல்லடம், காங்கயம் ரோடுகளில் ஜவுளி, மின்னணு சாதனங்கள், வீட்டு உபயோகப்பொருட்கள், மொபைல் போன் கடைகள் உட்பட பல்வேறு வர்த்தக நிறுவனங்களில் மெல்ல, மெல்ல கூட்டம் அதிகமாகி வருகிறது.

மக்கள் வருகைக்காக நிறைய பொருட்களை வியாபாரத்துக்கு வர்த்தகர்கள் கடைகளில் நிரப்பி உள்ளனர். தற்காலிக துணி, பலகார கடைகள், நடைபாதை கடைகள் முளைத்துள்ளன. நாளை முதல் குமரன் ரோடு உள்ளிட்ட ரோடுகளில் மக்கள் கூட்டம் அதிகரிக்கும் என்பதால் போக்குவரத்து நெரிசலை தவிர்க்கவும், சீராக வாகனங்கள் செல்லும் வகையில் போலீசார் ஆலோசனை செய்து நடவடிக்கைகள் மேற்கொண்டு வருகின்றனர்.

தீபாவளியையொட்டி சிறப்பு பஸ்கள் இயக்கப்படும் போது, பயணிகள் எளிதாக நின்று ஏறும் வகையில், தற்காலிக பஸ் நிலையம் ஏற்படுத்துவது, போக்குவரத்து மாற்றம் செய்வது போன்ற பணிகளை மேற்கொள்ள அனைத்து துறை அதிகாரிகளுடன் மாநகர போலீசார் ஆலோசனை செய்து வருகின்றனர்.

சமீபத்தில் தீபாவளி பண்டிகையையொட்டி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடந்தது. போலீசார், வருவாய்துறை, போக்குவரத்து துறை, தீயணைப்பு துறை உள்ளிட்ட அனைத்து துறையினர் பங்கேற்ற கூட்டம் நடந்தது. அதில், மக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தவும், தேவையான வசதிகளை செய்து கொடுக்க ஆலோசனை செய்யப்பட்டது. தற்காலிக பட்டாசு கடைகளுக்கு அனுமதி கொடுக்க ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. தொடர்ந்து நடக்கும் கூட்டங்களில் பல்வேறு அறிவுறுத்தல் வழங்கப்பட உள்ளது. இது குறித்து போலீசார் கூறுகையில், அதிகம் மக்கள் கூடும் இடத்தில் கண்காணிப்பு கோபுரம் அமைக்கப்பட உள்ளது. கேமரா பொருத்தப்பட்டு கண்காணிக்கப்பட உள்ளது. பிக்பாக்கெட், நகை பறிப்பு குற்றவாளிகளை கண்டறியும் வகையில் மக்கள் கூடும் இடம், பஸ்களில் மப்டி போலீசார் சுழற்சி முறையில் பாதுகாப்பு பணியில் ஈடுபட உள்ளனர் என்றனர்.

# கட்டிடவியல் படிப்புகளுக்கு மாணவர் சேர்க்கை நீட்டிப்பு

திருப்பூர், அக். 21

கவுன்சில் ஆப் ஆர்க்கிடெக்சர் அமைப்பின் கீழ், பி.ஆர்க்., எம்.ஆர்க்., எனப்படும் கட்டடவியல் படிப்புகள் வழங்கப்படுகின்றன. இப்படிப்புகளில் சேர அவகாசம் முடிவுபெறும் நிலையில் வருகிற 31ந்தேதி வரை, சேர்க்கை செயல்பாடுகள் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்படி சி.ஓ.ஏ., அங்கீகாரம் பெற்ற கல்லூரிகள் மூன்றாண்டு டிப்ளமோ படிப்பு, ஐந்தாண்டு பி.ஆர்க்., 2 ஆண்டு எம்.ஆர்க்., படிப்புகளின் சேர்க்கைக்கான இறுதிப்பணிகள் அக்டோபர் 31ந்தேதிக்குள் முடித்து, நவம்பர் 1ந்தேதி முதல் வகுப்புகள் துவக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. சேர்க்கை அவகாசம் நீட்டிக்கப்பட்டுள்ளதால், கற்றல், கற்பித்தல் செயல்பாடுகளுக்கான வகுப்புகளை அதிகரிக்கவும், இறுதிகட்ட சேர்க்கை பணிக்கு பின் விபரங்களை சமர்ப்பிக்க, சி.ஓ.ஏ., அறிவுறுத்தியுள்ளது.

## 2ஜி வழக்கில் 30ந்தேதிக்குள் எழுத்துப்பூர்வ வாதங்களை தாக்கல் செய்ய வேண்டும்: டெல்லி ஐகோர்ட்டு உத்தரவு




புதுடெல்லி, அக். 21

'2ஜி' அலைக்கற்றை ஒதுக்கீட்டில் முறைகேடு நடந்ததாக சி.பி.ஐ., மத்திய அமலாக்கத்துறை ஆகியவை தொடுத்த வழக்குகளில் குற்றம்சாட்டப்பட்ட முன்னாள் மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் ஆ.ராசா, தி.மு.க. எம்.பி. கனிமொழி உள்பட 14 பேரையும் விடுவித்து சி.பி.ஐ. சிறப்பு கோர்ட்டு கடந்த 2017ம் ஆண்டு டிசம்பர் இறுதியில் தீர்ப்பு கூறியது.

இந்த தீர்ப்புக்கு எதிராக சி.பி.ஐ., அமலாக்கத் துறை தாக்கல் செய்த மேல்முறையீடு அனுமதி மனுக்களை டெல்லி ஐகோர்ட்டு நீதிபதி தினேஷ் குமார் சர்மா விசாரித்து வருகிறார்.

விசாரணையின் போது, சி.பி.ஐ. தரப்பில் ஆஜரான அரசு தரப்பு சிறப்பு வக்கீல் சஞ்சய் ஜெயின் மேல்முறையீடு மனுவை ஏற்க வேண்டியதன் அவசியத்தை குறிப்பிட்டு வாதங்களை முன்வைத்தார்.

வாதங்களை பதிவு செய்து கொண்ட நீதிபதி தினேஷ் குமார் சர்மா, மேல்முறையீடு அனுமதி மனுக்கள் தொடர்பாக சி.பி.ஐ., அமலாக்கத் துறை, எதிர்மனுதாரர்கள் சார்பில் எழுத்துபூர்வமான வாதங்களை 10 பக்கங்களுக்கு மிகாமல் அக்டோபர் 30ந்தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டும். விசாரணை அக்டோபர் 31ந்தேதிக்கு தள்ளிவைக்கப்படுகிறது என உத்தரவிட்டார்.

## குஜராத்தில் 5 நாள் சிசு மூளைச்சாவடைந்து உயிரிழப்பு: மகனின் உறுப்புகளை தானம்

சூரத், அக். 21

குஜராத் மாநிலம் அம்ரேலி மாவட்டத்தைச் சேர்ந்தவர் ஹர்ஷ் சங்கனி வைர தொழிலில் ஈடுபட்டு வந்தார். இவரது மனைவி சேத்னா. இந்த தம்பதிக்கு கடந்த 13ந் தேதி தனியார் ஆஸ்பத்திரியில் ஆண் குழந்தை பிறந்தது. ஆனால் குழந்தைக்கு எந்த அசைவும் இல்லை. இதை தொடர்ந்து டாக்டர்கள் மேல் சிகிச்சைக்காக குழந்தையை மற்றொரு ஆஸ்பத்திரிக்கு மாற்றினர். எவ்வளவோ முயற்சி செய்த போதிலும் குழந்தையிடம் எந்த சலனமும் ஏற்படவில்லை. டாக்டர்கள் குழந்தை குணமடைவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதை உணர்ந்து இறுதியில் குழந்தை மூளைச்சாவு அடைந்ததாக அறிவித்தனர். இந்த நிலையில் மூளைச்சாவடைந்த மகனின் உறுப்புகள் மற்ற குழந்தைகளுக்குப் புதுவாழ்வை அளிக்கும் என்ற நம்பிக்கையில் பெற்றோர்களும் அவர்களது குடும்ப உறுப்பினர்களும் உறுப்புதானம் செய்ய தங்கள் சம்மதத்தை தெரிவித்தனர். இதை தொடர்ந்து குழந்தையின் கல்லீரல் வெற்றிகரமாக டெல்லியில் உள்ள ஒன்பது மாத குழந்தைக்கு மாற்றப்பட்டது. குழந்தையின் இரண்டு சிறுநீரகங்களும் 13 வயது மற்றும் 15 வயதுடைய இரண்டு குழந்தைகளுக்கு புதிய வாழ்க்கையை அளித்து உள்ளது.

## புதிதாக 5 ஆயிரம் குழந்தைகள் காப்பகங்கள்: மத்திய மந்திரி ஸ்மிருதி இரானி அறிவிப்பு



புதுடெல்லி, அக். 21

இந்திய தொழில் கூட்டமைப்பின் (சி.ஐ.ஐ.) தேசிய கவுன்சில் கூட்டம் நேற்று டெல்லியில் நடந்தது. கூட்டத்தில் மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை மந்திரி ஸ்மிருதி இரானி கலந்துகொண்டார். அப்போது பெண்கள் தலைமைத்துவத்திற்கான சி.ஐ.ஐ. மையத்தை இரானி தொடங்கி வைத்தார்.

கூட்டத்தில் அவர் பேசும்போது, "பெண்கள் வீடு மற்றும் சொந்த ஊரை விட்டு வெளியேறி வேலையில் ஈடுபடுவதற்கு பொருளாதார அர்த்தமுள்ள போட்டி வாய்ப்புகளை நிறுவனங்கள் ஏற்படுத்தித் தர வேண்டும். தொழில்துறை தலைமை சட்டமன்ற முயற்சிகளை ஆதரிக்க வேண்டும்" என்று வலியுறுத்தினார்.

இதையடுத்து அவர் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் "அடுத்த வாரத்திற்குள் நகர மையங்களில் 5,000 குழந்தைகள் காப்பகங்களை அரசாங்கம் தொடங்கும்" என்று கூறி உள்ளார்.

## 10 ஆண்டு கால உறவு முறிந்தது.. காதலரை பிரிந்தார் இத்தாலிய பிரதமர் மெலோனி

இத்தாலி, அக. 21

ஜியாம்ப்ருனோவும் மெலோனியும் கடந்த 10 ஆண்டுகளாக திருமணம் செய்துக் கொள்ளாமல் உறவில் இருந்து வந்தனர். இந்த தம்பதிக்கு ஏழு வயதில் பெண் குழந்தை ஒன்று உள்ளது.

இந்நிலையில், இத்தாலிய பிரதமர் ஜார்ஜியா மெலோனி இன்று தனது நீண்டகால காதலர் தொலைக்காட்சி பத்திரிகையாளர் ஆண்ட்ரியா ஜியாம்ப்ருனோவை பிரிந்ததாக அறிவித்தார். அவர் சமீபத்தில் தொலைக்காட்சியில் பாலியல் தொடர்பான கருத்துக்களை வெளியிட்டதை தொடர்ந்து ஜார்ஜியா இந்த முடிவை எடுத்ததாக தெரிவித்துள்ளார். இதுகுறித்து மெலோனி தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது: கிட்டத்தட்ட 10 வருடங்கள் நீடித்த ஆண்ட்ரியா ஜியாம்ப்ரூனோவுடனான எனது உறவு இங்கே முடிவடைகிறது. எங்கள் பாதைகள் சில காலமாக வேறுபட்டன. அதை ஒப்புக்கொள்ளும் நேரம் வந்துவிட்டது. நாம் இருந்த தருணங்களைப் பாதுகாப்பேன், நமது நட்பைப் பாதுகாப்பேன், தன் தாயை நேசித்து, தந்தையை நேசிக்கும் ஏழு வயதுச் சிறுமியை எப்படியும் பாதுகாப்பேன். என்னிடம் எதுவும் இல்லை. இவ்வாறு அவர் குறிப்பிட்டிருந்தார். இதற்கிடையே, இந்த முடிவுக்குப் பிறகு ஜியாம்ப்ரூனோவின் கருத்துக்களுக்காக தன்னை மதிப்பிடக்கூடாது என்றும் எதிர்காலத்தில் அவரது நடத்தை பற்றிய கேள்விகளுக்கு நான் பதிலளிக்க மாட்டேன் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# வெள்ளகோவில் அருகே வாய்க்காலில் தவறி விழுந்து முதியவர் பலி

வெள்ளகோவில்:அக்.21

வெள்ளகோவில் அடுத்த முத்தூர் பக்கம் உள்ள வாலிபனங்காடு பகுதியை சேர்ந்தவர் ராமசாமி (வயது 60), விவசாயி. இவர் நேற்று தனது விவசாய பூமிக்கு பாசனத்திற்காக கீழ்பவானி பாசன வாய்க்கால் மதகை பாசனத்திற்காக திறந்து விட்ட போது, தவறி வாய்க்காலில் விழுந்து விட்டதாக தெரிகிறது. இதனால் தலையில் பலத்த அடிபட்டு வாய்க்காலில் இருந்து மேலே எழுந்து வர முடியாமல் நீரில் மூழ்கி இறந்து விட்டதாக கூறப்படுகிறது. இதுகுறித்து வெள்ளகோவில் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்கள்.

# உடுமலை அரசு கல்லூரி முன்னாள் மாணவர்கள் சந்திப்பு நிகழ்ச்சி

உடுமலை, அக். 21

திருப்பூர் மாவட்டம் உடுமலை அரசு கலைக் கல்லூரியில் 1987 ஆம் ஆண்டு முதல் 1991 ஆம் ஆண்டு வரை படித்த முன்னாள் மாணவர்கள் சார்பில் கல்லூரியில், கல்லூரி சங்கமும் என்ற நிகழ்ச்சி நடைபெற்றது.




இதில் கல்லூரி முதல்வர் கல்யாணி, ஓய்வு பெற்ற பேராசிரியர்கள் மணி, வெள்ளியங்கிரி ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியில் 33 வருடங்களுக்கு முனனால் அரசு கலைக் கல்லூரியில் பயின்ற முன்னாள் மாணவமாணவிகள் சந்தித்து தங்களது கல்லூரி நாட்களில் கடந்த கால நினைவுகளை நினைத்து மகிழ்ச்சி அடைந்தனர். முக்கிய நிகழ்வாக 33 வருடங்களுக்கு முன் பாடம் சொல்லிக் கொடுத்த பேராசிரியர்களை கவுரவிக்கும் பொருட்டு அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து, நினைவு பரிசு வழங்கி, முன்னாள் மாணவர்கள் காலில் விழுந்து ஆசீர்வாதம் வாங்கிய நிகழ்வு பெறும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியது.

இதற்கிடையில் அரசு கலைக் கல்லூரியில் பயின்ற மாணவர்கள் தற்பொழுது பல்வேறு காவல் துறை,

தீயணைப்பு துறை, ஆசிரியர்கள், கப்பல் மற்றும் விமானத்துறை மற்றும் பல்வேறு துறைகளில் உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர். நிகழ்ச்சி நிறைவில் கல்லூரியில் மாணவர்கள் போல மாறி, கல்லூரி நாட்களில் செய்ததைப் போல விசில் அடித்தும், திரைப்பட பாடல்களுக்கு நடனமாடியும் தங்களது எல்லையற்ற மகிழ்ச்சியை வெளி படுத்திய சம்பவம் அனைவரையும் மிகுந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியது. இதில் உடுமலை,

பொள்ளாச்சி, தாராபுரம், பல்லடம், பழனி, திண்டுக்கல் உள்பட பல்வேறு பகுதிகளில் இருந்து 500க்கும் மேற்பட்ட முன்னாள் மாணவர்கள் கலந்து கொண்டனர். மேலும் கல்லூரிக்கு வருகை புரிந்த அனைத்து மாணவர்களுக்கும் நினைவு பரிசு வழங்கி, கவுரவிக்கப்பட்டது. இதற்கான ஏற்பாடுகளை மாணவர்கள் கூட்டமைப்பு சார்பில் பாலசுப்பிரமணியம், செந்தில்குமார் உட்பட பல்வேறு நண்பர்கள் மூலம் செய்யப்பட்டு இருந்தது.

# வெள்ளகோவிலில் ரூ.1.50 கோடி செலவில் பெருமாள் கோவில் புனரமைப்பு பணி தொடக்கம்: அமைச்சர் தொடங்கி வைத்தார்

வெள்ளகோவில், அக். 21

திருப்பூர் மாவட்டம், வெள்ளகோவில் வரதராஜ பெருமாள் கோவில் மிகவும் பழமையான கோவிலாகும். இந்த கோவிலில் ஸ்ரீதேவி, பூதேவி, சமேத வரதராஜ பெருமாள், ஆஞ்சநேயர், மகாலட்சுமி, கருடாழ்வார், விநாயகர் ஆகிய தெய்வங்கள் உள்ளன. இந்த கோவில் தரை மட்டத்தில் இருந்து தாழ்வான நிலையில் இருப்பதால் மழை நீர் மற்றும் கழிவு நீர் கோவில் கருவறை வரை செல்கிறது. இதனால் மழைக்காலங்களில் பக்தர்கள் சாமி தரிசனம் செய்ய முடியாமல் கடும் சிரமத்திற்கு உள்ளாகி வந்தனர். இதனால் கோவிலை புனரமைப்பு செய்ய முடிவு செய்யப்பட்டு, கோவிலை முற்றிலும் அகற்றப்பட்டு இந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 10 ந்தேதி பாலாலயம் செய்யப்பட்டது. இந்நிலையில் ரூ.1 கோடியே 50 லட்சம் செலவில் கோவில் கட்ட பூமி பூஜை மற்றும் கால்கோள் விழா நடைபெற்றது. கோவில் கட்டும் பணியை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன் கலந்து கொண்டு தொடக்கி வைத்தார்.



இதில் திருப்பூர் மாநகராட்சி 4ம் மண்டல தலைவர் இல.பத்மநாபன், திருப்பூர் தெற்கு மாவட்ட திமுக செயலாளர் ராசி கே.ஆர்.முத்துக்குமார், திருப்பணி குழு தலைவர் ஏ.எம்.சி. செல்வராஜ், அ.தி.மு.க. ஒன்றிய செயலாளர் எஸ்.என். முத்துக்குமார், கோவில் செயல் அலுவலர் எஸ். ராமநாதன், வெள்ளகோவில் நகர தி.மு.க. செயலாளர் சபரி எஸ். முருகானந்தன் உட்பட உள்ளாட்சி பிரதிநிதிகள், திருப்பணி குழு உறுப்பினர்கள், பக்தர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# காதலியை மண்எண்ணை ஊற்றி எரித்த வாலிபருக்கு ஆயுள் சிறை

திருப்பூர், அக். 21

திருப்பூர் அருகே திருமுருகன்பூண்டி பக்கம் உள்ள ஆத்துப்பாளையம் பாரதி நகரை சேர்ந்தவர் சந்திரன். இவரது மகன் கவுதம் (வயது 27). இவர், ஆந்திரா மாநிலத்தை சேர்ந்த லட்சுமி (வயது 21) என்பவரை காதலித்து வந்ததாக தெரிகிறது. பின்னர் இரண்டு பேரும் திருப்பூர் அருகே உள்ள பொங்குபாளையம் கிராமம், காளம்பாளையத்தில் வீடு வாடகைக்கு எடுத்து தங்கி வந்துள்ளனர். அப்போது லட்சுமி நிறைமாத கர்ப்பிணியாக இருந்துள்ளார். இந்நிலையில் கடந்த 1332019 அன்று மதியம் 12 மணி அளவில் லட்சுமியின் கருவை கலைக்குமாறு கவுதம் நிர்ப்பந்தம் செய்துள்ளார். இதனை லட்சுமி மறுத்துள்ளார். இதனால் இரண்டு பேருக்கும் சண்டை வந்துள்ளதாக தெரிகிறது. அப்போது ஆத்திரம் அடைந்த கவுதம், மண்எண்ணையை எடுத்து லட்சுமி மீது ஊற்றி தீ வைத்துள்ளார். இதில் படுகாயம் அடைந்த லட்சுமி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார்.பின்னர் அவர் இதுகுறித்து பெருமாநல்லூர் போலீசில் புகார் கொடுத்தார். அதன் பேரில் போலீசார் வழக்கு பதிவு செய்து, கவுதமை கைது செய்து, கோர்ட்டில் ஆஜர் படுத்தினர். பின்னர் இந்த வழக்கு விசாரணைக்கு வந்தது. திருப்பூர் மகிளா அமர்வு நீதிமன்ற நீதிபதி டி.பாலு வழக்கை விசாரணை செய்தார். இதில் குற்றம் சாட்டப்பட்ட கவுதமுக்கு 3 ஆண்டு கடுங்காவல் சிறைத்தண்டனையும், ரூ.2500 அபராதமும விதிக்கப்பட்டது. இதை கட்டத்தவறினால் மேலும் 6 மாத கடுங்காவல் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்றும், மேலும் மற்றொரு பிரிவில், ஆயுள் சிறை தண்டனையும், ரூ.5 ஆயிரம் அபராதமும் விதிக்கப்பட்டது. இதை கட்டத்தவறினால் மேலும் 6 மாதம் கடுங்காவல் சிறை தண்டனை வழங்கப்படும் என்றும் தீர்ப்பு அளிக்கப்பட்டது.



# பெண் விவசாயிகள் காளான் உற்பத்தி செய்ய மானியம்

மூலனூர், அக். 21

மூலனூர்வட்டாரதோட்டக்கலை உதவி இயக்குனர் செல்வகுமார் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

மூலனூர் வட்டாரத்தில் தேசிய தோட்டக்கலை இயக்கம் 202223ம் ஆண்டுகளுக்கான பெண் விவசாயிகளுக்கு மட்டும் சிறிய அளவிலான காளான் உற்பத்திக் கூடம் ஒன்று இலக்கு நிர்ணயிக்கப்ப ட்டுள்ளது. இதற்கு மொத்தமாக செலவினம் ரூ.2 லட்சம் ஆகும். இதற்கான மானியமாக 50 சதவீதமாக ரூ.1லட்சம் வழங்கப்படுகிறது. பெண் விவசாயிகள் வாழ்க்கைதரத்தைஉயர்த்த இந்த திட்டம் பயன்பெறும். எனவே இத்திட்டம் தேவையான விவசாயிகள் மட்டும் மூலனூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குனர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட தொலைபேசி எண்களை தொடர்பு கொள்ளலாம். செல்: 96777 76214 மற்றும் 97905 26223. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# திருப்பூரில் மரங்களை வெட்டியதாக 4 பேருக்கு அபராதம்

திருப்பூர், அக். 21

திருப்பூர் மாநகராட்சி, 7வது வார்டு போயம்பாளையம் குருவாயூரப்பன் லே அவுட் கிழக்கு பகுதியில் ரோட்டோரத்தில் இருந்த 10 முதல், 15 ஆண்டுக்கு மேலான 6 மரங்களை அங்குள்ள சிலர் கடந்த ஆகஸ்ட் மாதம் அனுமதியின்றி, வெட்டினர். இது தொடர்பாக பொதுமக்கள்அளித்த புகாரின் பேரில் நில வருவாய் ஆய்வாளர் கோமதி, விசாரணை மேற்கொண்டு, தாசில்தார் மகேஸ்வரனிடம் அறிக்கை சமர்ப்பித்தார்.



இந்தநிலையில் மரங்களை வெட்டியதற்காக போயம்பாளையம் குருவாயூரப்பன் லே அவுட் கிழக்கு பகுதியை சேர்ந்த ஏஞ்சல் என்பவருக்கு 4 ஆயிரத்து 572 ரூபாய், குருவாயூரப்பன் நகர் வடக்கு பகுதியைச் சேர்ந்த லட்சுமணன் என்பவருக்கு 12 ஆயிரத்து, 544 ரூபாய், குருவாயூரப்பன் நகர் பூங்கா வீதியைச் சேர்ந்த கமலம் என்பவருக்கு 3 ஆயிரத்து, 816 ரூபாய், குருவாயூரப்பன் நகர் வடக்கு பகுதியை சேர்ந்த பழனிச்சாமி என்பவருக்கு 3 ஆயிரத்து, 560 ரூபாய் அபராதம் விதித்து தாசில்தார் உத்தரவிட்டார்.

# ஆயுத பூஜையையொட்டி திருப்பூரில் விற்பனைக்காக குவிக்கப்பட்டுள்ள பூசணிக்காய்

திருப்பூர், அக். 21

ஆயுத பூஜை பண்டிகைக்கு இன்னும் சில தினங்களே உள்ளன. ஆயுத பூஜையின் போது வீடுகள், பனியன் நிறுவனங்கள், வர்த்தக நிறுவனங்கள், கடைகள், வாகனங்களுக்கு பூஜை போடுவதற்கும், திருஷ்டி கழிப்பதற்கும் பூசணிக்காய் அதிக அளவில் பயன்படுத்தப்படுவது வழக்கம். இதனால் திருப்பூருக்கு தற்போது பெருந்துறை மற்றும்திருப்பூர் சுற்றுவட்டார பகுதிகளில் இருந்து பூசணிக்காய் விற்பனைக்காக அதிக அளவில் கொண்டு வரப்படுகிறது. திருப்பூர் தென்னம்பாளையம் மார்க்கெட்,காட்டன்மார்க்கெட் வளாகத்தில் உள்ள காய்கறி மார்க்கெட் மற்றும் பல்லடம் ரோடு, தாராபுரம் ரோடு, பெருமாள் கோவில் வீதி உள்பட மாநகரின் பல்வேறு இடங்களில் இவை விற்பனைக்கு குவித்து வைக்கப்பட்டுள்ளன.



ஒரு கிலோ பூசணிக்காய் ரூ.20 முதல் அதிகபட்சமாக ரூ.30 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்கள், வியாபாரிகள் மற்றும் பனியன் நிறுவனங்களில் இருந்தும் பலர் இவற்றை அதிக அளவில் வாங்கி செல்கின்றனர். இதே போல் வெள்ளரி பழமும் பல இடங்களில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

திருப்பூரில் உள்ள பூ மார்க்கெட்டிற்கு தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பூக்கள் விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இந்த நிலையில் ஆயுத பூஜை பண்டிகையையொட்டி ஓசூர், ராயக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் இருந்து செவ்வந்தி பூ வரத்து அதிகரிக்க தொடங்கியுள்ளது. இதில் செவ்வந்தி நாட்டு ரகம் ஒரு கிலோ ரூ.100 முதல் ரூ.160 வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது. ஒட்டு ரகம் ரூ.200 வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

இந்தநிலையில் பிற பூக்களின் விலை வழக்கத்தை விட அதிகரித்துள்ளது. கடந்த 2 நாட்களுக்கு முன்பு ரூ.320க்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ மல்லிகைப்பூ இன்று ரூ.520க்கு விற்பனை செய்யப்பட்டது. ரூ.240க்கு விற்பனை செய்யப்பட்ட முல்லை ரூ.320 க்கு விற்பனை செய்யப்பட்டது.

ஜாதிமல்லி ரூ.320, சம்பங்கி ரூ.120, பட்டுப்பூ ரூ.80, அரளி ரூ.220 முதல் ரூ.240 வரைக்கும் விற்பனை செய்யப்பட்டது. அனைத்து பூக்களின் விலையும் அதிகரித்துள்ள போதிலும் பண்டிகை நெருங்கி வருவதால் பொதுமக்களும், வியாபாரிகளும் பூக்களை அதிக அளவில் வாங்கி செல்கின்றனர். இதனால் மார்க்கெட்டில் பூக்களின் விற்பனையும்முரமாக நடந்து வருகிறது. செவ்வந்தி பூவின் வரத்து அதிகமாக இருப்பதால் இதன் விலை பெரிய அளவில் உயரவில்லை.

# உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி., மகளிர் கல்லூரியில் ஜப்பானிய மலர் அலங்கரிப்பு கண்காட்சி

உடுமலை, அக். 21

உடுமலை ஸ்ரீ ஜி.வி.ஜி விசாலாட்சி மகளிர் கல்லூரி , வாமன் விருக்ஷா போன்சாய் கிளப் சார்பில் இயற்கைக்குள் சிறிய இயற்கை மற்றும் இக்கபானாவின் ஜப்பானிய மலர் அலங்கரிப்பு பற்றிய கலை கண்காட்சி நடைபெற்றது.கண்காட்சி ஜி.வி.ஜி., மாநாட்டு அரங்கம் 1 ல் நடைபெற்றது.இந்த கண்காட்சியின் துவக்க விழா நிகழ்ச்சிக்கு கல்லூரியின் செயலர் ஸ்ரீமதி சுமதி கிருஷ்ண பிரசாத் முன்னிலை வகித்தார்.ஆலோசகர் மற்றும் இயக்குநர் மஞ்சுளா வரவேற்று பேசினார்.போன்சாய் கிளப்பின் தலைவர் ஸ்ரீமதி மீனா குருசாமி சிறப்புரை ஆற்றினார்.சிறப்பு விருந்தினராக ஓய்வு பெற்ற ஐ.பி.எஸ்., அதிகாரி விஜயகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.அப்போது அவர் போன்சாய் கிளப்பின் அமைப்பு பற்றியும் வெளிநாடுகளில் இருக்கும் போன்சாய் மரங்களின் தன்மை குறித்தும்விரிவாகவிளக்கினார்.



மேலும் போன்சாய் மரங்கள் அமைதி, சமாதானம்,நற்குணங்கள், நல்ல எண்ணங்களை பிரதிபலிக்கின்றன என்று கூறியதுடன் போன்சாய் மரத்தின் சிறப்புக்களை எடுத்துரைத்தார்.அதைத் தொடர்ந்து போன்சாய், சாய்கேய்,சூசேகி வகைகள் மற்றும் இக்கபானா ஜப்பானிய மலர்கள்அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த அரங்குகளை விஜயகுமார் திறந்து வைத்து பார்வையிட்டார். அப்போது பல்வேறு மாநிலங்கள் மற்றும் நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள்,கல்லூரி நிர்வாகத்தினர் உடன் இருந்தனர். முடிவில் பத்மாபால சுப்பிரமணியன் நன்றி கூறினார்.

# திருப்பூர் கோர்ட்டில் நண்பர்களுக்கு எதிராக சாட்சி அளித்தவருக்கு கொலை மிரட்டல்

திருப்பூர், அக்.21

திருப்பூர் சாமுண்டிபுரத்தை சேர்ந்த நண்பர்கள் பாலாஜி (வயது 26), விஷ்ணு(24), நரேந்திரன்(25). இவர்கள் மீது வேலம்பாளையம் போலீசில் அடி தடி வழக்கு உள்ளது.இந்த வழக்கு விசாரணை திருப்பூர் ஜே.எம்3 கோர்ட்டில் நடந்து வருகிறது. இவ்வழக்கு விசாரணைக்கு அவர்கள் நீதிபதி கார்த்திகேயன் முன்னிலையில் ஆஜராகினர். இதில், வழக்கு சம்பவம் தொடர்பாக மதன்குமார் என்பவர் கோர்ட்டில் நீதிபதி முன் ஆஜராகி சாட்சி அளித்தார்.

அதன்பின், கோர்ட்டிலிருந்து வெளியே வந்த அவரை கோர்ட்டு வாசலிலேயே குற்றம்சாட்டப்பட்ட நண்பர்கள், 3 பேரும், கொலை மிரட்டல் விடுத்தனர். அதிர்ச்சியடைந்த மதன்குமார் இதுகுறித்து நீதிபதியிடம் புகார் தெரிவித்தார். வீரபாண்டி போலீசில் மிரட்டல் தொடர்பாக புகார் அளிக்கப்பட்டது. இதையடுத்து 3 பேரையும் போலீசார் கைது செய்தனர்.

# கோழி பண்ணையில் வேலை பார்த்த 6 குழந்தை தொழிலாளர்கள் மீட்பு

திருப்பூர், அக். 21

திருப்பூர் மாவட்டம், குண்டடம், பெல்லம்பட்டியில் கோழிப்பண்ணை ஒன்றில் குழந்தை தொழிலாளர்கள் வேலை செய்து வருவதாக திருப்பூர் சைல்டு லைனுக்கு புகார் வந்தது.

இதனையடுத்து சைல்டு லைன் மற்றும் குண்டடம் போலீசார், அங்கு திடீர் ஆய்வு மேற்கொண்டனர்.

அப்போது மேற்கு வங்க மாநிலத்தை சேர்ந்த குடும்பத்தினர் கோழிப்பண்ணையில் தங்கி வேலை செய்வதும், குடும்பத்தை சேர்ந்த 13 முதல், 17 வயது உடைய 6 பேர் பள்ளிக்கு செல்லாமல் வேலை செய்து வந்ததும் தெரிய வந்தது.

6 பேரையும் சைல்டு லைன் அமைப்பினர் மீட்டு மாவட்ட குழந்தைகள் நலக்குழு முன் ஆஜர் படுத்தினர். வேலைக்கு அனுப்ப கூடாது என்றும், பள்ளிக்கு அனுப்ப அறிவுறுத்தி பெற்றோரிடம் எழுதி வாங்கியும் குழந்தைகளை அனுப்பி வைத்தனர். மேலும் கோழிப் பண்ணை நிர்வாகத்தினர் மீது தொழிலாளர் நல அதிகாரிகள் மற்றும் குண்டடம் போலீசார் விசாரித்து வருகின்றனர்.

# சாக்கடை கால்வாய் அடைப்பை சரி செய்ய கோரி திருப்பூரில் பொதுமக்கள் திடீர் சாலை மறியல்

திருப்பூர், அக். 21

திருப்பூர் மங்கலம் சாலையில் உள்ள ஆண்டிபாளையம் முதல் இடுவம்பாளையம் வரை சாக்கடை கால்வாயில் அடைப்பு ஏற்பட்டதன் காரணமாக சாக்கடை நீர் சாலைகளில் செல்வதால் அப்பகுதியில் உள்ள முல்லை நகர் , அவ்வழியே செல்லும் வாகன ஓட்டிகள் மற்றும் நடந்து செல்லும் பொதுமக்கள் சிரமத்திற்கு உள்ளாகி வந்தனர்.



இது தொடர்பாக பல முறை மாநகராட்சி அதிகாரியிடம் கூறியும் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று தெரிகிறது.இதனால் ஆத்திரமடைந்த அப்பகுதி பொதுமக்கள் சாலை மறியலில் ஈடுபட்டனர்.

இதனால் அப்பகுதியில் கடுமையான போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது .

தகவல் கிடைத்ததும் திருப்பூர் மத்திய போலீசார் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மறியலில் ஈடுபட்ட பொதுமக்களிடம், அதிகாரிகளிடம் பேசி நடவடிக்கை எடுப்பதாக உறுதி கூறியதை அடுத்து அவர்கள் மறியலை கைவிட்டு கலைந்து சென்றனர்.

நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066

# தட்கல் டிக்கெட் எடுக்க குவிந்த ரெயில் பயணிகள்

திண்டுக்கல், அக்.21

இந்துக்களின் முக்கிய பண்டிகைகளான ஆயுதப் பூஜை வருகிற 23ந்தேதியும், அதற்கு மறுநாள் விஜயதசமியும் கொண்டாடப்படுகிறது. அதற்கு முன்பாக நாளை (சனிக்கிழமை), நாளை மறுநாள் (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய 2 வாரவிடுமுறை நாட்கள் சேர்ந்து வருகிறது. இதனால் தொடர்ச்சியாக 4 நாட்கள் விடுமுறைஆகும்.எனவே 4 நாட்கள் விடுமுறையையொட்டி வெளியூரில் வசிப்பவர்கள், வெளியூர்களில் வேலை செய்பவர்கள் சொந்த ஊருக்கு செல்கின்றனர்.



இதற்காககடந்தமாதமே சிலர் ரெயிலில் செல்வதற்கு டிக்கெட் முன்பதிவு செய்துவிட்டனர். எனவே திண்டுக்கல் வழியாக செல்லும் அனைத்து ரெயில்களிலும் முன்பதிவு டிக்கெட் இல்லை.

முன்பதிவு டிக்கெட் கிடைக்காதவர்கள், தட்கல் டிக்கெட் அல்லது முன்பதிவு இல்லாத டிக்கெட் எடுத்து தான் ரெயிலில் பயணிக்க வேண்டியது இருக்கிறது. மேலும் 4 நாட்கள் விடுமுறையை முழுமையாக அனுபவிக்க, இன்று (வெள்ளிக்கிழமை) ரெயில்களில் ஊருக்கு செல்ல வேண்டும்.

எனவே தட்கல் டிக்கெட் எடுக்க நினைத்தவர்கள் ஆன்லைனில் முயற்சி செய்ததோடு, ரெயில் நிலையங்களுக்கும் படையெடுத்தனர். இதில் திண்டுக்கல் ரெயில் நிலையத்துக்கு தினமும் சராசரியாக 20 பேர் தட்கல் டிக்கெட் எடுக்க வருவார்கள். ஆனால் நேற்றைய தினம் சுமார் 50 பேர் தட்கல் டிக்கெட் எடுக்க வந்தனர். அதில் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட டிக்கெட் எடுப்பதற்கு வந்தனர்.

இதனை அறிந்த ரெயில்வே அதிகாரிகள், பயணிகளை 2 வரிசைகளில் நிற்க வைத்து விரைவாக தட்கல் டிக்கெட் எடுக்க உதவினர். மேலும் தட்கல் டிக்கெட் எடுக்க வந்தவர்களில், ஏஜெண்டுகள் யாராவது இருக்கிறார்களா? என்றும் சோதனை செய்தனர்.

இதற்கிடையே பலர் வீடுகளில் இருந்தபடி ஆன்லைனில் தட்கல் டிக்கெட் எடுத்ததால், ரெயில் நிலையத்துக்கு வந்தவர்களில் ஒருசிலர் தட்கல் டிக்கெட் கிடைக்காமல் ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர்.

# மாநகராட்சி பள்ளிக்கூடத்தில் போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி

ஈரோடு, அக். 21

மதுக்கடைகளை படிப்படியாக மூட நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஈரோட்டில் அமைச்சர் முத்துசாமி கூறினார்.




ஈரோட்டில் வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் முத்துசாமி நேற்று நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

ஈரோடு கோபி நெடுஞ்சாலை விரிவுபடுத்தும் பணி நடைபெற்று வருகிறது. அங்கு சுங்கச்சாவடி அமைக்க பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவிக்கின்றனர். ஏற்கனவே அந்த திட்டம் தயாரித்தபோது, அதையும் சேர்த்து தயாரித்துள்ளனர். பொதுமக்களின் வேண்டுகோளை முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலினின் கவனத்துக்கு கொண்டு சென்று, நடவடிக்கை எடுக்கப்படும். கடந்த ஆட்சியில் பெண்களுக்கு மானிய விலையில் ஸ்கூட்டர் வழங்கப்பட்டது. ஆட்சியின் இறுதியில் ஸ்கூட்டர் வாங்கியவர்களுக்கு தேர்தல் அறிவிப்பால், மானியத்தொகை விடுவிக்கப்படவில்லை. இதுகுறித்து சம்பந்தப்பட்ட துறை அமைச்சரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும்.

கோபியில் அண்ணாமலை பேசும்போது, தி.மு.க. அமைச்சர்களின் செயல்பாடுகள் சரி இல்லை, திருப்தியாக இல்லை, என குற்றம் சாட்டி உள்ளார். எதிர்க்கட்சியில் உள்ளவர்கள் எங்களை பாராட்டுவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கவில்லை. நாங்கள் எங்கள் மனசாட்சிக்கு திருப்தியாக வேலை செய்கிறோம். மக்கள் கொடுக்கும் கோரிக்கைக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கிறோம்.

பெருந்துறை சிப்காட்டில் உள்ள பிரச்சினைக்கு முழுமையாக தீர்வு காண உரிய நடவடிக்கை எடுக்கப்படும். ஈரோடு மாநகரில் 10 ஆண்டுகளாக திட்டமிடல் சரியில்லாமல் பல்வேறு பணிகள் தேங்கி கிடக்கின்றன. தற்போது மாநகராட்சி, நெடுஞ்சாலை, மின்வாரியம், சாலை பராமரிப்பு போன்றவற்றை ஒருங்கிணைத்து மேற்கொள்வதால் பணிகள் சற்று தாமதம் ஆகிறது.

அத்திக்கடவு அவினாசி திட்டம் தாமதமாக முக்கிய காரணம், திட்டம் தொடங்கியபோது முறையாக திட்டமிடப்படவில்லை. பல நிலங்களில் பிரச்சினை நீடித்ததால், அங்கு பணி செய்ய முடியவில்லை. தற்போது நாங்கள் பேசி தீர்வு கண்டு, நிலத்தை கையகப்படுத்தி ஒழுங்கு செய்துள்ளோம். தமிழகத்தில் ஏழைகள், ஏழைகளாகவே இருக்க வேண்டும் என்பதற்காகத்தான் டாஸ்மாக் கடையை நடத்துகின்றனர் என்றும், தி.மு.க. அமைச்சர்கள் தான் மது ஆலைகளை நடத்துவதால் மதுக்கடைகளை மூட மாட்டார்கள் என்றும் அண்ணாமலை பேசி வருகிறார். அப்படி எந்தஎண்ணமும்இல்லை. அரசின் வருவாய்க்காக, கடை நடத்தப்படவில்லை. முதல் அமைச்சர் பேசும்போது, 'டாஸ்மாக் கடையை படிப்படியாக குறைப்போம்' என கூறி உள்ளார். ஏற்கனவே 500 கடைகள் மூடப்பட்டுள்ளன. யாருக்கும் மதுக்கடையை நடத்த வேண்டும் என்ற எண்ணமும், விருப்பமும் இல்லை. ஆனால் திடீரென மூடிவிட முடியாது. எனவே, மதுக்கடைகளை படிப்படியாக மூட நடவடிக்கை எடுக்கப்படும்.

மேலும் மதுவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கவுன்சிலிங் வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். புதிதாக மதுகுடிக்க வரும் இளைஞர்களை, மதுக்கடைக்காரர்கள் அழைத்து கவுன்சிலிங் கொடுத்து மாற்றினால், சம்பந்தப்பட்ட மதுக்கடைக்காரர்களுக்கு பரிசு வழங்கும் திட்டத்தை தெரிவித்துள்ளோம். இந்த பழக்கத்தில் இருந்து விடுபட நாங்கள் எடுக்கும் நடவடிக்கையை அவர்கள் கவனிக்கவில்லை என நினைக்கிறேன்.

டாஸ்மாக் பணியாளர்களின் குறைகளை தீர்க்கவும், டாஸ்மாக் கடையின் வாடகை, மின் கட்டணத்தை நேரடியாக தலைமை அலுவலகத்தில் இருந்து செலுத்த நடவடிக்கை எடுத்து வருகிறோம். ஈரோடு மாவட்டத்தில் பள்ளிக்கூடம், கோவில் உள்ளிட்ட 40 இடங்களில் உள்ள மதுக்கடைகளை அகற்ற கோரிக்கை வந்துள்ளது. அவற்றை மூடிவிட்டு, பிரச்சினை இல்லாத இடத்துக்கு மாற்றவும் முயற்சி மேற்கொண்டு வருகிறோம். இவ்வாறு அமைச்சர் முத்துசாமி கூறினார்.

# மாநகராட்சி கமிஷனர் இடமாற்றத்தை கண்டித்து அ.தி.மு.க.வினர் வெளிநடப்பு

மதுரை, அக். 21

மதுரை மாநகராட்சி கவுன்சிலர்கள் கூட்டம், அண்ணா மாளிகையில் நேற்று நடந்தது. புதிய மாநகராட்சி கமிஷனர் மதுபாலன் முன்னிலை வகித்தார். மேயர் இந்திராணி தலைமை தாங்கினார். கூட்டம் தொடங்கியதும் மேயர் தீர்மானங்களை வாசித்து புதிய கமிஷனரை சபையில் அறிமுகம் செய்து வைத்தார். அப்போது திடீரென்று எதிர்கட்சி தலைவர் சோலைராஜா எழுந்து நின்று பேசினார். அப்போது அவர், தி.மு.க. ஆட்சிக்கு வந்து 2 ஆண்டுகளில் 4 மாநகராட்சி கமிஷனர்கள் மாற்றப்பட்டு உள்ளனர். கடந்த 4 மாதங்களுக்கு பொறுப்பேற்ற பிரவீன் குமார் சிறப்பாக பணியாற்றினார். ஆனால் எதற்கு அவரை மாற்றம் செய்தீர்கள் என்றார். அதற்கு மேயர், இது அரசின் முடிவு என்றார்.




உடனே சோலைராஜா, தவறான விஷயங்களுக்கு அவர் ஒத்துழைப்பு தராததால் மாற்றி விட்டீர்கள் என்றார். அவரின் இந்த பேச்சுக்கு எதிர்ப்பு தெரிவித்து தி.மு.க. கவுன்சிலர்கள் கோஷம் எழுப்பினர். பதிலுக்கு அ.தி.மு.க.வினர் அனைவரும் எழுந்து நின்றனர்.

அப்போது சோலைராஜா, ஒரு கமிஷனர் மதுரைக்கு வந்தால் அவர் மதுரை மக்களின் பிரச்சினைகளை அறிந்து செயல்பட 3 மாதங்கள் ஆகிவிடும். தற்போது மழை காலம் தொடங்கி விட்டதால் டெங்கு கொசு உள்பட பல பிரச்சினைகளை சந்தித்து வருகின்றனர் என்றார்.

பின்னர் அவர், கமிஷனர் இடமாற்றம் செய்வதை கண்டித்து வெளிநடப்பு செய்வதாக கூறி அ.தி.மு.க. கவுன்சிலர்கள் சோலைராஜா தலைமையில் சபையில் இருந்து வெளியேறினர். பின்னர் அவர் மாநகராட்சி அலுவலகத்தில் கமிஷனர் இடமாற்றத்தை கண்டித்து கோஷம் எழுப்பினர்.

அதனைத்தொடர்ந்து சபையில் விவாதம் தொடங்கியது. முதலில் மண்டல தலைவர்கள் பேசினர். 1வது மண்டல தலைவர் வாசுகி பேசும்போது, பாதாள சாக்கடை பணிகள் மந்தமாக நடக்கிறது. பல இடங்களில் சாலைகள் அமைப்பதற்கு ஜல்லி கற்கள் மட்டும் கொட்டப்பட்டுள்ளன. சாலை பணிகளை விரைவுப்படுத்த வேண்டும். தெரு விளக்குகள் எரியாமல் உள்ளன. பழைய விளக்குகளைமாற்றி புதிய விளக்குகள் அமைக்க வேண்டும் என்றார்.

மண்டலம்2 தலைவர் சரவண புவனேஸ்வரி பேசும்போது, சாலை பணிகளை தகுதியற்ற ஒப்பந்தகாரர்களுக்கு மாநகராட்சி வழங்கி உள்ளது. அவர்கள் பல பணிகளை எடுத்து விட்டு எந்த பணியையும் செய்ய வில்லை. ஒரு பணியை எடுத்து முடிக்காதவர்களுக்கு மீண்டும் புதிய பணியை ஏன் வழங்க வேண்டும். பணியை எடுத்து அதனை சரியாக செய்யாதவர்களை கருப்பு பட்டியலில் வைக்க வேண்டும் என்றார்.

மண்டலம்4 தலைவர் முகேஷ் சர்மா பேசும்போது, பல இடங்களில் குடிநீர் பிரச்சினை ஏற்படுகிறது. இதை அதிகாரிகள் கண்டு கொள்வதே இல்லை. மறியல் செய்ய போகும் மக்களை ஒவ்வொரு முறையும் தடுத்து சமாதானம் செய்து வருகிறோம். எங்கள் மண்டலத்திற்கு உட்பட்ட பகுதிகளில் முல்லைபெரியாறு குடிநீர் திட்டப்பணிகள் மந்த நிலையில் நடக்கிறது.அதனைதுரிதப்படுத்த வேண்டும் என்றார்.

மண்டலம்5 தலைவர் சுவிதா பேசும் போது, எங்கள் மண்டலத்தில் பணிகளை மேற்கொள்ள ஜே.சி.பி. எந்திரங்கள் இல்லை. எனவே தீபாவளி பரிசாக எங்களுக்கு ஜே.சி.பி. எந்திரம் வழங்க வேண்டும் என்றார்.

# பாப்பிரெட்டிப்பட்டி அருகே தார்சாலை பணியை விரைந்து முடிக்க பொதுமக்கள் கோரிக்கை

தர்மபுரி, அக். 21

பாப்பிரெட்டிப்பட்டி ஒன்றியம் ஆலாபுரம் ஊராட்சியில் ஆலாபுரம், அம்மாபாளையம், ஜீவா நகர், மருக்காலம்பட்டி, நடூர், நேருநகர் ஆகிய கிராமங்கள் உள்ளன. இந்த ஊராட்சியில் அம்மாபாளையம், தோழனூர் பகுதிகளுக்கு பாப்பிரெட்டிப்பட்டி கோழிமேக்கனூரில் இருந்து செல்லும் சாலை சேதம் அடைந்தது. இதையடுத்து கோழிமேக்கனூரில் இருந்து 2 கி.மீட்டர் தொலைவுக்கு புதிய தார்சாலை அமைக்கும் பணி சில மாதங்களுக்கு முன் தொடங்கியது.




இந்த பணி தொடங்கி சாலை முழுமையாக தோண்டப்பட்டு அதில் ஜல்லிகற்கள் கொட்டப்பட்டது. அதன் பின்னர் தார்சாலை அமைக்கும் பணி நிறுத்தப்பட்டது. இதனால் அந்த வழியாக சென்று வரும் கிராம மக்கள், பள்ளி மாணவ, மாணவிகள், வாகன ஓட்டிகள் அவதியடைந்து வருகின்றனர். இதுகுறித்து மாவட்ட, ஒன்றிய அதிகாரிகளுக்கு புகார் தெரிவித்தும் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிகிறது. எனவே தார்சாலை அமைக்கும், பணியை விரைந்து முடித்து பொதுமக்கள் பயன்பாட்டுக்கு கொண்டு வர வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# அமைச்சரவையில் இருந்து நீக்கினால்தான் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கிடைக்கும்: அண்ணாமலை பேட்டி

பல்லடம், அக். 21

திருப்பூர் மாவட்டம் பல்லடம் அருகே உள்ள கள்ளக்கிணறு பகுதியை சேர்ந்த பா.ஜனதா கிளை நிர்வாகி மோகன்ராஜ் (வயது 49), அவரது தாயார் புஷ்பவதி மற்றும் சித்தி ரத்தினாம்பாள், பெரியப்பா மகன் செந்தில்குமார் ஆகிய 4 பேரும் கடந்த மாதம் 3ந்தேதி வெட்டி படுகொலை செய்யப்பட்டனர். வீட்டின் அருகே அமர்ந்து மது குடித்ததை தட்டிக்கேட்டதால் இந்த பயங்கர கொலைச் சம்பவம் நடந்தது.



இந்த நிலையில் பல்லடத்தில் என் மண், என் மக்கள் நடைபயணம் மேற்கொண்டுள்ள தமிழக பா.ஜனதா தலைவர் அண்ணாமலை 4 பேர் படுகொலை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட குடும்பத்தினரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார். பின்னர் கொலை செய்யப்பட்ட பா.ஜனதா நிர்வாகி மோகன்ராஜ் மகன் பிரணவ் (வயது 13) கல்வி செலவு முழுவதையும் பா.ஜனதா ஏற்றுக்கொள்ளும் என்று அறிவித்தார். பின்னர் அவர் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழ்நாட்டில் மதுவால் நடைபெறும் சமூக விரோத செயல்களுக்கு இந்த 4 பேர் படுகொலை சம்பவமே சாட்சி. மதுபானம் அருந்தி மிருகமானவர்களால் 4 குடும்பங்களின் நிம்மதி தொலைந்து உள்ளது. சமூக விரோதிகளையும், குற்றப் பின்னணியில் உள்ளவர்களையும், காவல் துறை கண்காணிக்க தவறிவிட்டது. இங்கு உளவுத்துறை போலீசார் உள்ளனரா என்று சந்தேகம் அளிக்கிறது. தமிழகத்தில் மதுபானத்தை விற்பனை செய்து இளைஞர்களை கொலைகாரர்களாக மாற்றியுள்ளனர். அமைச்சர் செந்தில் பாலாஜிக்கு ஜாமீன் கிடைக்காதது அவர் அமைச்சராக நீடிப்பதால்தான், எனவே தமிழக முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் அவரை அமைச்சரவையில் இருந்து நீக்கினால் உடனடியாகஜாமீன்கிடைக்கும். தேர்தல் கூட்டணி குறித்து தேசிய தலைமை முடிவு செய்யும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இதைத் தொடர்ந்து பல்லடம் நகரில் அண்ணாமலை நடைபயணம் மேற்கொண்டார். அவருக்கு பா.ஜ.க.வினர் மற்றும் பொதுமக்கள் உற்சாக வரவேற்பு அளித்தனர்.

# சாமி வேடம் அணிந்த பக்தர்கள் ஊர்வலம்

கோயம்புத்தூர், அக். 21

கோவையில் சாமி வேடம் அணிந்த பக்தர்கள் ஊர்வலமாக சென்றனர்.



கோவை சங்கனூரில் இருந்து நல்லாம்பாளையம் செல்லும் வழியில் அன்னியப்பன் வீதியில் ஞானமூர்த்தீஸ்வரர் சமேத முத்தாரம்மன் கோவில் உள்ளது. மிகவும் புகழ்வாய்ந்த இந்த கோவிலுக்கு தினமும் ஏராளமான பக்தர்கள் வந்து சாமி தரிசனம் செய்து விட்டு செல்கிறார்கள்.

இந்த கோவிலில் தசரா திருவிழா கடந்த 15ந் தேதி காலை 11.30 மணிக்கு முகூர்த்தக்கால் நடுதலுடன் தொடங்கியது. குலசேகரன்பட்டினத்தில் உள்ள முத்தாரம்மன் கோவிலில் தசரா திருவிழா தொடங்கிய பிறகு இந்த கோவிலில் தசரா திருவிழா தொடங்கியது.

தசரா திருவிழா தொடங்கியதை தொடர்ந்து ஏராளமான பக்தர்கள் மாலை அணிந்து கொண்டனர். 10 நாட்கள் நடைபெறும் இந்த விழாவில் தினமும் பல்வேறு பூஜைகள், சிறப்பு அலங்காரங்கள் மற்றும் அன்னதானம் நடைபெறுகிறது.

தசரா விழாவை முன்னிட்டு நேற்று ஏராளமான பக்தர்கள் வேடம் அணிந்தனர். காளி, சுடலைமாடன், கருப்பராயர், ஆஞ்சநேயர், அம்மன், விநாயகர், முருகன், ராஜா, பெண், புலி, கரடி என பல்வேறு வேடங்களை அணிந்தனர். பின்னர் அவர்கள் கோவிலை சுற்றி வலம் வந்து வழிபட்டனர். அதன் பிறகு ஒவ்வொரு குழுவினராக பிரிந்து கோவை நகரின் பல்வேறு இடங்களுக்கு சென்றனர். சில நாட்கள் கோவையில் வேடம் அணிந்து வலம் வரும் பக்தர்கள் தசராதிருவிழாவுக்கு குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோவிலுக்கு சென்று நேர்த்திகடன் செலுத்த உள்ளனர்.

# பலத்த மழையால் ராமநாதசுவாமி கோவிலுக்குள் புகுந்து தண்ணீர்: 3ம் பிரகாரத்திலும் தேங்கியது

ராமேசுவரம், அக். 21

தமிழகத்தில் நிலவும் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக பரவலாக பல்வேறு இடங்களில் மழை பெய்து வருகிறது. இந்த நிலையில் ராமநாதபுரம் மாவட்டத்தில் சில பகுதிகளில் நேற்று காலை மழை பெய்தது. குறிப்பாக ராமேசுவரத்தில் பலத்த மழையாக கொட்டியது. காலை 10 மணி அளவில் தொடங்கி, சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக பெய்தது. இதனால் சாலைகளில் மழை நீர் பெருக்கெடுத்து ஓடியது. பல இடங்களில் தண்ணீர் குளம்போல் தேங்கி நின்றது. மழையால் ராமேசுவரம் கோவிலுக்குள் தண்ணீர் புகுந்தது. அதாவது, கோவிலின் மேல்தளத்தில் இருந்து விழுந்த தண்ணீர், 3ம் பிரகாரத்தில் சுவர்களில் விழுந்து நேராக அந்த பிரகார பாதையில் வந்து தேங்கியது. மழைநீரில் நடந்து பக்தர்கள் 3ம் பிரகாரத்தை வலம் வந்தனர். இதே போல் கோவிலின் கிழக்கு ரதவீதி, தெற்கு ரதவீதியிலும் மழைநீர் பெருக்கெடுத்து ஓடியது. இதனால் அந்த வழியாக கோவிலுக்கு வந்த பக்தர்கள் சிரமம் அடைந்தனர். 3ம் பிரகாரம் மற்றும் ரத வீதிகளில் தேங்கிய மழை நீரை வாருகால் வழியாக வெளியேற்றும் பணி தீவிரமாக நடைபெற்றது.



ராமேசுவரம் ராமநாதசுவாமி கோவிலின் உப கோவிலான லட்சுமணேசுவரர் கோவிலை சுற்றியும் மழைநீர் தேங்கி நின்றது. சில மாதங்களாக மழையே பெய்யாமல் வெயில் வாட்டி வதைத்து வந்த நிலையில் நேற்று பெய்த இந்த பலத்த மழையால் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்தனர்.

# போலீசாருக்கு மிரட்டல் விடுத்தவர் கைது

கடலூர், அக். 21

காட்டுமன்னார்கோவில் போலீஸ் நிலைய சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் சக்கரவர்த்தி(வயது 52), போலீஸ் ஏட்டு சுப்பிரமணியன் ஆகியோர் ஒரு மோட்டார் சைக்கிளில் காட்டுமன்னார்கோவில் அருகே பல்வாய் கண்டன் கிராமத்தில்தகராறுநடைபெறுவது குறித்து விசாரிப்பதற்காக ஒரு மோட்டார் சைக்கிளில் புறப்பட்டனர். பல்வாய் கண்டன் மெயின்ரோட்டில் சென்றபோது, ஈச்சம்பூண்டி கிராமத்தில் உள்ள அம்மன் கோவில் தெருவை சேர்ந்த திலிபன், அஜித், கதிரவன்(வயது 50) ஆகியோர் குடிபோதையில் காரை வழியில் நிறுத்திக்கொண்டு சிறப்பு சப் இன்ஸ்பெக்டர் சக்கரவர்த்தி, போலீஸ் ஏட்டு சுப்பிரமணியன் ஆகியோரை வழிமறித்து ஆபாசமாக பேசி பணிசெய்யவிடாமல் கொலை மிரட்டல் விடுத்ததாக கூறப்படுகிறது. இதுகுறித்த புகாரின்பேரில் திலிபன் உள்பட 3 பேர் மீது காட்டுமன்னார்கோவில் போலீசார் வழக்குப்பதிவு செய்து கதிரவனை கைது செய்தனர். திலிபன், அஜித் ஆகியோரை தேடி வருகின்றனர்.

# திருமானூர் அருகே வெடி விபத்தில் 12 பேர் பலி: மனித உரிமை ஆணைய உறுப்பினர் நேரில் ஆய்வு

அரியலூர், அக். 21

அரியலூர் மாவட்டம், திருமானூர் அருகே உள்ள விரகாலூர் கிராமத்தில் செயல்பட்டு வந்த நாட்டு வெடி தயாரிப்பு ஆலையில் கடந்த 9ந் தேதி பயங்கர வெடி விபத்து ஏற்பட்டது. இதில் 12 பேர் பலியானார்கள். பலர் படுகாயம் அடைந்து அரியலூர், தஞ்சை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகிறார்கள். இந்தநிலையில் விபத்து ஏற்பட்ட இடத்தை தமிழ்நாடு மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசன், மாவட்ட கலெக்டர் ஆனிமேரி ஸ்வர்ணா, தொழில் துறை பாதுகாப்பு அலுவலர் தமிழ்ச்செல்வன் ஆகியோர் நேற்று நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். அப்போது மாவட்ட தீயணைப்பு அலுவலர் அம்பிகாவிடம் தீ விபத்து



ஏற்பட்டதற்கான காரணம் குறித்து மனித உரிமை ஆணைய உறுப்பினர் கண்ணதாசன் கேட்டறிந்தார். மேலும் விரகாலூர் அண்ணா நகரில் பாதிக்கப்பட்ட மக்களிடம் குறைகளை கேட்டறிந்து ஆறுதல் கூறினார்.

Title-Code:-TNTAM24615
R.Dis No:- 968/2023 21.10.2023



# லியோ ரிலீஸ்.. விஜய் ரசிகர்கள் 20 அடி நீள கேக் வெட்டி கொண்டாட்டம்



லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் வெளியாகியுள்ள திரைப்படம் 'லியோ'. இப்படத்திற்கு ரசிகர்கள் பெரும் வரவேற்பை அளித்து வருகின்றனர்.

லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடிப்பில் உருவாகியுள்ள லியோ திரைப்படம் தமிழகம் மட்டுமல்லாது உலகம் முழுவதும் இன்று வெளியானது. லியோ திரைப்படத்தை வரவேற்கும் வகையில் திருப்பூர் தாராபுரம் சாலையில் உள்ள ஒரு திரையரங்கில் விஜய் ரசிகர்கள் ஏற்பாட்டில் திரையரங்கம் முழுவதும் திருவிழா போல ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மேளதாளத்துடன் சிங்கம் வேடமணிந்தவர்கள் நடனமாட கார், ஜீப் உள்ளிட்டவற்றில் முழுவதுமாக லியோ திரைப்பட போஸ்டர்கள் ஒட்டப்பட்டு ஊர்வலமாக திரையரங்கிற்கு வந்தனர். மேலும் விஜயின் புகைப்படங்கள் அடங்கிய 20 அடி நீளமுள்ள கேக் வெட்டப்பட்டு ரசிகர்களுக்கு வழங்கப்பட்டது. விஜய் ரசிகர்களின் இந்த செயலால் திரையரங்கம் முழுவதும் தீபாவளி பண்டிகை போல காட்சி அளித்தது.

# அமைதியான அமலா பால்.. குழப்பத்தில் ரசிகர்கள்

நடிகை அமலா பால் பல படங்களில் நடித்துள்ளார். இவர் சினிமா மட்டுமின்றி சமூக வலைத்தளங்களிலும் ஆர்வம் கொண்டவர்.

சிந்து சமவெளி, மைனா, வேலையில்லா பட்டதாரி, தெய்வ திருமகள் உள்பட பல படங்களில் நடித்து முன்னணி நடிகையாக வலம் வந்தவர் அமலா பால். தமிழ், தெலுங்கு, மலையாள மொழி படங்களில் தொடர்ந்து நடித்து வந்தார். ஆடை என்ற படத்தில் ஆடையில்லாமல் நடித்து பரபரப்பை ஏற்படுத்தினார். இயக்குனர் விஜய்யை காதலித்து திருமணம் செய்தார். பின்னர் அவர்களுக்குள் கருத்து வேறுபாடு ஏற்பட்டு பிரிந்தனர்.

இதைத்தொடர்ந்து மீண்டும் சினிமாவில் நடித்து வந்த அமலாபால் கவர்ச்சியாக நடித்து வந்தார். சினிமா மட்டுமின்றி சமூக வலைத்தளங்களிலும் ஆர்வம் கொண்ட அமலாபால் வெளிநாடு மற்றும் பல்வேறு இடங்களுக்கு சென்று புகைப்படங்களை பதிவிட்டு வந்தார். நண்பர்கள் உடன் ஜாலியாக சுற்றுலா செல்வதும் பாருக்கு செல்வதும் என கவர்ச்சியான புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிட்டு பரபரப்பை ஏற்படுத்தி வந்தார்.

கவர்ச்சியாகவலம்வந்தஅமலாபால்நேற்றுஇன்ஸ்டாகிராம்பக்கத்தில்அமைதியாக தியானம் செய்வது போன்ற புகைப்படங்களை வெளியிட்டுள்ளார். இந்த புகைப்படங்களை பார்த்து கவர்ச்சி அமலாபால் அமைதியான அமலாபால் ஆக மாறியது ஏன்? என்பது உள்பட பல்வேறு கருத்துக்களை ரசிகர்கள் பதிவிட்டுள்ளனர்.


# அடையாளத்தை மாற்றுவதற்கான ஒரு பயணம் கவனம் ஈர்க்கும் 'லேபில்' டிரைலர்



இயக்குனர் அருண்ராஜா காமராஜ் இயக்கத்தில் உருவாகியுள்ள வெப் தொடர் 'லேபில்'. இந்த தொடரில் ஜெய் கதாநாயகனாக நடிக்க அவருக்கு ஜோடியாக தன்யா ஹோப் நடித்துள்ளார். மேலும், மகேந்திரன், ஹரி சங்கர் நாராயணன், சரண் ராஜ், ஸ்ரீமன், இளவரசு மற்றும் சுரேஷ் சக்ரவர்த்தி ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளனர்.

இந்த தொடருக்கு சாம் சி.எஸ் இசையமைத்துள்ளார். தினேஷ் கிருஷ்ணன் ஒளிப்பதிவு செய்துள்ளார். 'லேபில்' வெப் தொடரின் பர்ஸ்ட்லுக் ரசிகர்களிடம் மிகப்பெரும் வரவேற்பை பெற்றது. இந்த நிலையில், தற்போது இந்த தொடரின் டிரைலர் வெளியாகியுள்ளது. இந்த டிரைலர் தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது. 'லேபில்' வெப் தொடர் டிஸ்னி பிளஸ் ஹாட்ஸ்டார் ஓடிடி தளத்தில் வெளியாகவுள்ளது குறிப்பிடத்தக்கது.

# 5 எழுத்துக்களுக்கு ரூ.5 லட்சம்... கவிஞர் வைரமுத்து அறிவித்த பரிசுப்போட்டி..!




கவிஞர்வைரமுத்து 'மகாகவிதை' என்ற புத்தகத்தை எழுதியுள்ளார். இந்நிலையில் அவர் வெளியிட்டுள்ள வீடியோவில், 'மகா கவிதை' என்ற தலைப்பில் அறிவுப்போட்டி ஒன்றை நடத்தப்போவதாக அறிவித்துள்ளார். இதன்படி 'மகா கவிதை' என்ற வார்த்தையில் உள்ள 5 எழுத்துக்களின் உள்ளடக்கத்தையும் கண்டறிந்தால், ஒரு எழுத்திற்கு ஒரு லட்சம் வீதம் மொத்தம் 5 லட்சம் ரூபாய் பரிசாக வழங்கப்படும் என கவிஞர் வைரமுத்து தெரிவித்துள்ளார். போட்டியில் பங்கு பெற விரும்புவோர் 5 எழுத்துக்களின் உள்ளடக்கங்களையும் mahaakavithai.vairamuthu@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு நவம்பர் 30ந்தேதிக்குள் அனுப்ப வேண்டும் எனவும், பரிசு வெல்பவர்களுக்கு, ரூ.5 லட்சம் பரிசை விழா மேடையில் வைத்து வழங்குவோம் எனவும் வைரமுத்து தெரிவித்துள்ளார்.

# லெஸ்பியன்னு சொல்லு கெத்தா இருக்கும்.. வைரலாகும் மிரியம்மா டிரைலர்



மூத்த நடிகை ரேகா கதையின் நாயகியாக நடித்துள்ள திரைப்படம் 'மிரியம்மா'. இப்படத்தை இயக்குனரான மாலதி நாராயண் தயாரிக்கிறார்.

அறிமுக இயக்குனர் மாலதி நாராயண் இயக்கத்தில் தயாராகும் முதல் திரைப்படம் 'மிரியம்மா'. இதில் மூத்த நடிகை ரேகா கதையின் நாயகியாக நடிக்கிறார். இவருடன் எழில் துரை, சினேகா குமார், அனிதா சம்பத், விஜே ஆஷிக், மாலதி நாராயண் ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்கள்.

ஜேசன் வில்லியம்ஸ் ஒளிப்பதிவு செய்ய, இந்த திரைப்படத்தில் இடம் பெறும் பாடல்களுக்கு ஏ. ஆர். ரெஹைனா இசையமைக்கிறார். படத்தொகுப்பு பணிகளை கமல் கவனிக்க, கலை இயக்க பணிகளை 'யாத்திசை' புகழ் ரஞ்சித் மேற்கொள்கிறார். பெண்மணிகளை மையப்படுத்தி தயாராகும் இந்த திரைப்படத்தை 72 ஃபிலிம்ஸ் எனும் பட நிறுவனம் சார்பில் இயக்குனரான மாலதி நாராயண் தயாரிக்கிறார்.

இந்நிலையில், இப்படத்தின் டிரைலர் வெளியாகியுள்ளது. கலகலப்பாக உருவாகியுள்ள இந்த டிரைலரை இயக்குனர் பார்த்திபன் தனது சமூக வலைதளத்தில் வெளியிட்டார். 'லெஸ்பியன்னு சொல்லு கெத்தா இருக்கும்' போன்ற வசனங்கள் இடம்பெற்றுள்ள இந்த டிரைலர் தற்போது சமூக வலைதளத்தில் வைரலாகி வருகிறது.

# சசிகுமார் லிஜோமோல் ஜோஷ் நடிப்பில் உருவாகும் திரில்லர் டிராமா



சசிகுமார் புதிய படம் ஒன்றில் நடிக்கிறார். இந்த படத்தில் லிஜோமோல் ஜோஷ் கதாநாயகியாக நடிக்கிறார்.

கழுகு படம் மூலம் கவனம் ஈர்த்தவர் இயக்குனர் சத்யா சிவா. இவர்தற்போது புதிய படம் ஒன்றை இயக்குகிறார். சசிகுமார் கதாநாயகனாக நடிக்கும் இந்த படத்தில் ஜெய்பீம் படத்தில் கவனம் ஈர்த்த லிஜோமோல் ஜோஸ் கதாநாயகியாக நடிக்கிறார். மேலும், சுதேவ் நாயர், பருத்திவீரன் சரவணன், கேஜிஎஃப் மாளவிகா, போஸ்வெங்கட், மு.ராமசாமி, ரமேஷ் கண்ணா ஆகியோர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கின்றனர்.

90களில் நடைபெற்ற ஒரு சம்பவத்தினை அடிப்படையாகக் கொண்டு திரில்லர் டிராமாவாக இப்படம் உருவாகுகிறது. 90 களின் காலகட்டத்தைப் பிரதிபலிக்கும் வகையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் மிகப்பெரும் பொருட்செலவில் ஒரு பிரம்மாண்டமான செட் அமைத்துப் படத்தின் காட்சிகளைப் படக்குழு படமாக்கி வருகிறது.

பாண்டியன் பரசுராம் முதல் முறையாக விஜய கணபதிஸ் பிக்சர்ஸ் (Vijayaganapathy's Pictures) சார்பில் பிரமாண்டமாக தயாரிக்கும் இப்படத்திற்கு ஜிப்ரான் இசையமைக்கிறார். இப்படத்தின் படப்பிடிப்பு சென்னையைச் சுற்றியுள்ள பகுதிகளில் பரபரப்பாக நடைபெற்று வருகிறது.

# ஒரு நாள் போட்டியில் அதிக சதத்தில் தெண்டுல்கரை நெருங்கும் கோலி..!




13வது உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி இந்தியாவின் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடந்து வருகிறது. இதில் இந்தியா, நடப்பு சாம்பியன் இங்கிலாந்து, நியூசிலாந்து, ஆஸ்திரேலியா, தென்ஆப்பிரிக்கா, பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம், ஆப்கானிஸ்தான், நெதர்லாந்து ஆகிய 10 அணிகள் பங்கேற்றுள்ளன. ஒவ்வொரு அணியும் தங்களுக்குள் தலா ஒரு முறை மோத வேண்டும். லீக் சுற்று முடிவில் டாப்4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரைஇறுதிக்கு தகுதி பெறும்.

இந்த நிலையில் மராட்டிய மாநிலம் புனேயில் நேற்று அரங்கேறிய 17வது லீக் ஆட்டத்தில் முன்னாள் சாம்பியனான இந்திய அணி, வங்காளதேசத்தை எதிர்கொண்டது. இந்திய அணியில் மாற்றம் இல்லை. வங்காளதேச அணியில் கேப்டன் ஷகிப் அல்ஹசன் தொடையில் ஏற்பட்ட காயத்தில் இருந்து முழுமையாக குணமடையாததால் ஓய்வு அளிக்கப்பட்டது. அத்துடன் வேகப்பந்து வீச்சாளர் தஸ்கின் அகமது கழற்றி விடப்பட்டார். இவர்களுக்கு பதிலாக நசும் அகமது, ஹசன் மக்முத் சேர்க்கப்பட்டனர். கேப்டன் பொறுப்பை நஜ்முல் ஹூசைன் ஷன்டோ கவனித்தார்.

'டாஸ்' ஜெயித்த வங்காளதேசம் முதலில் பேட்டிங்கை தேர்வு செய்தது. இதன்படி தன்சித் ஹசன், லிட்டான் தாஸ் அந்த அணியின் இன்னிங்சை தொடங்கினர். பும்ரா, முகமது சிராஜியின் சீற்றத்தில் ஆரம்பத்தில் சற்று தடுமாறினர். தன்சித் ஹசன் 6 ரன்னில் இருந்த போது, பும்ராவின் பந்துவீச்சில் வெளியேறி இருக்க வேண்டியது. துல்லியமாக காலுறையில் பட்ட பந்துக்கு இந்திய தரப்பில் டி.ஆர்.எஸ்.ன்படி அப்பீல் செய்யவில்லை. டி.வி. ரீப்ளேயில் பந்து ஸ்டம்பை தாக்குவது தெரிந்தது. கண்டம் தப்பிய தன்சித் ஹசன் அதை கச்சிதமாக பயன்படுத்திக் கொண்டார். முதல் 5 ஓவர்களில் 10 ரன் மட்டுமே எடுத்த வங்காளதேசம் அடுத்த 5 ஓவர்களில் 53 ரன்கள் திரட்டி வியக்க வைத்தது. இதில் பும்ரா, ஷர்துல் தாக்குர் ஓவர்களில் தன்சித் சிக்சர் பறக்க விட்டதும் அடங்கும்.

வங்காளதேசத்துக்கு அருமையான தொடக்கம் தந்த இந்த கூட்டணியை ஸ்கோர் 93ஐ எட்டிய போது (14.4 ஓவர்) குல்தீப் யாதவ் உடைத்தார். அவரது பந்து வீச்சில் தன்சித் (51 ரன், 43 பந்து, 5 பவுண்டரி, 3 சிக்சர்) எல்.பி.டபிள்யூ. ஆனார். அடுத்து வந்த பொறுப்பு கேப்டன் நஜ்முல் ஹூசைன் ஷன்டோ (8 ரன்), மெஹிதி ஹசன் (3 ரன்) நிலைக்கவில்லை. மறுமுனையில் அரைசதத்தை கடந்த லிட்டான்தாஸ் 66 ரன்களில் (82 பந்து, 7 பவுண்டரி) ஜடேஜாவின் சுழலில் சிக்கினார்.

மிடில் வரிசையில் முஷ்பிகுர் ரஹிம் (38 ரன், 46 பந்து, ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர்), மக்முதுல்லா (46 ரன், 36 பந்து, 3 பவுண்டரி, 3 சிக்சர்) கணிசமான பங்களிப்பை வழங்கி 250ஐ கடக்க உதவினர். நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் வங்காளதேசம் 8 விக்கெட்டுக்கு 256 ரன்கள் எடுத்தது. இந்திய தரப்பில் ஜஸ்பிரித் பும்ரா, முகமது சிராஜ், ஜடேஜா தலா 2 விக்கெட்டுகளை சாய்த்தனர்.

பின்னர் 257 ரன்கள் இலக்கை நோக்கி இந்தியாவின் தொடக்க ஆட்டக்காரர்களாக கேப்டன் ரோகித் சர்மாவும், சுப்மன் கில்லும் கால்பதித்தனர். முதல் ஓவரில் 2 பவுண்டரியுடன் அட்டகாசமாக தொடங்கிய இவர்கள் வங்காளதேச பந்துவீச்சை அடித்து நொறுக்கினர். வலுவான அஸ்திவாரம் அமைத்த இவர்கள் ஸ்கோர் 88 ரன்களாக (12.4 ஓவர்) உயர்ந்த போது பிரிந்தனர். ஹசன் மக்மூத் பந்துவீச்சில் சிக்சர் ஓடவிட்ட ரோகித் சர்மா (48 ரன், 40 பந்து, 7 பவுண்டரி, 2 சிக்சர்) 'ஷாட்பிட்ச்'சாக வந்த அடுத்த பந்தையும் எல்லைக்கோட்டைக்கு விரட்ட முயற்சித்து கேட்ச் ஆகிப்போனார். 2வது விக்கெட்டுக்கு களம் புகுந்த விராட் கோலி 2 ரன், பவுண்டரி, சிக்சருடன் கணக்கை தொடங்கி ரசிகர்களை மகிழ்வித்தார். இன்னொரு பக்கம் சுப்மன் கில் 53 ரன்களில் ( 55 பந்து, 5 பவுண்டரி, 2 சிக்சர்) கேட்ச் ஆனார். அவரை தொடர்ந்து வந்த ஸ்ரேயாஸ் அய்யர் (19 ரன்) நிலைக்கவில்லை.

4வது விக்கெட்டுக்கு விராட் கோலியும், லோகேஷ் ராகுலும் இணைந்து அணியின் வெற்றிப்பாதையை எளிதாக்கினர். அபாரமாக மட்டையை சுழற்றிய கோலி இலக்கை நெருங்கிய சமயத்தில் சதத்தை குறி வைத்து விளையாடினார். வெற்றிக்கு 2 ரன் தேவைப்பட்ட போது அவரது செஞ்சுரிக்கு 3 ரன் தேவையாக இருந்தது. இறுதியில் பிரமாதமான ஒரு சிக்சருடன் சதத்தை ருசித்து, இலக்கையும் எட்ட வைத்து ரசிகர்களை குதூகலத்தில் மிதக்க வைத்தார். அவருக்கு இது 48வது சதமாகும். உலகக் கோப்பை போட்டிகளில் 3வது செஞ்சுரியாகும்.

இந்திய அணி 41.3 ஓவர்களில் 3 விக்கெட்டுக்கு 261 ரன்கள் சேர்த்து 7 விக்கெட் வித்தியாசத்தில வெற்றி பெற்றது. விராட்கோலி 103 ரன்களுடனும் (97 பந்து, 6 பவுண்டரி, 4 சிக்சர்), ராகுல் 34 ரன்களுடனும் (34 பந்து, 3 பவுண்டரி, ஒரு சிக்சர்) களத்தில் இருந்தனர். கோலி ஆட்டநாயகன் விருதை பெற்றார். இந்திய அணி தொடர்ச்சியாக பெற்ற 4வது வெற்றி இதுவாகும். 4 ஆட்டத்திலும் இந்தியா இலக்கை வெற்றிகரமாக விரட்டிப்பிடித்திருப்பது சிறப்பம்சமாகும். வங்காளதேசத்துக்கு 3வது தோல்வியாகும். இந்திய அணி அடுத்த ஆட்டத்தில் நியூசிலாந்துடன் 22ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) மோதுகிறது.

போட்டிக்கு பின்னர் பேட்டியளித்த விராட் கோலி, "ஜடேஜாவிடம் இருந்து ஆட்டநாயகன் விருதை தட்டிப்பறித்ததற்காக வருந்துகிறேன். உலகக் கோப்பையில்சில அரைசதங்கள்அடித்துள்ளேன். அதைபெரிய ஸ்கோராக மாற்றி, இந்த முறை ஆட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்ய விரும்பினேன். அதை செய்து காட்டியிருக்கிறேன்" என்று கூறினார்.

103 ரன்கள் விளாசிய விராட் கோலிக்கு இது 48வது ஒரு நாள் போட்டி சதமாகும். ஒரு நாள் போட்டியில் அதிக சதங்கள் அடித்தவர்களின் பட்டியலில் முதலிடத்தில் உள்ள இந்திய ஜாம்பவான் சச்சின் தெண்டுல்கரை (49 சதம்) சமன் செய்ய இன்னும் ஒரு சதம் மட்டுமே தேவையாகும். தெண்டுல்கரின் சாதனையை இந்த உலகக் கோப்பை தொடரிலேயே தகர்த்து விடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த வரிசையில் 3வது இடத்தில் ரோகித் சர்மா (31 சதம்) உள்ளார்.

# உலகக் கோப்பையில் ஆயிரம் ரன்களை கடந்த முஷ்பிகுர் ரஹிம்



முஷ்பிகுர் ரஹிம் உலகக் கோப்பையில் ஆயிரம் ரன்களை எட்டிய 2வது வங்காளதேச வீரர் என்ற சிறப்பை பெற்றார்.

உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் நேற்று நடைபெற்ற 17வது லீக்கில் முன்னாள் சாம்பியன் இந்திய அணி, வங்காளதேசத்துடன் மோதியது. இதில் டாஸ் வென்று பேட்டிங் தேர்வு செய்த வங்காளதேச அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்புக்கு 256 ரன்கள் எடுத்தது. பின்னர் 257 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இந்திய அணி பேட்டிங் செய்தது.

அணியின் தொடக்க ஆட்டக்காரர்களாக களமிறங்கிய கேப்டன் ரோகித் சர்மா மற்றும் சுப்மன் கில் இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். அதிரடியாக விளையாடிய ரோகித் சர்மா 48 ரன்கள் எடுத்து ஆட்டமிழந்தார். சுப்மன் கில் அரைசதம் அடித்து 53 ரன்களில் அவுட்டானார். அடுத்து வந்த ஸ்ரேயஸ் ஐயர் 19 ரன்கள் எடுத்து அவுட்டானார். அடுத்து களமிறங்கிய விராட் கோலி தனது சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். மறுபுறம் அவருக்கு கே.எல்.ராகுல் பக்கபலமாக இருந்தார். கடைசியில் சிக்சர் அடித்து தனது சதத்தை பூர்த்தி செய்ததுடன், ஆட்டத்தை வெற்றிகரமாக முடித்துவைத்தார் விராட் கோலி.

முடிவில் இந்திய அணி 41.3 ஓவர்களில் வெற்றி இலக்கை கடந்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. விராட் கோலி 103 ரன்களுடனும், கே.எல். ராகுல் 34 ரன்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர். இந்திய அணி, உலகக்கோப்பை தொடரில் தொடர்ச்சியாக 4 வெற்றிகளை பதிவுசெய்து புள்ளிப்பட்டியலில் இரண்டாவது இடத்தில் உள்ளது. இந்திய அணி, தனது அடுத்த லீக் ஆட்டத்தில் புள்ளிப்பட்டியலில் முதலிடத்தில் உள்ள நியூசிலாந்து அணியுடன் வரும் ஞாயிற்றுக்கிழமை மோதுகிறது

★ இந்த போட்டியில் வங்காளதேச தொடக்க ஆட்டக்காரர்கள் தன்சித் ஹசன் லிட்டான் தாஸ் முதல் விக்கெட்டுக்கு 93 ரன்கள் சேர்த்தனர். உலகக் கோப்பையில் அந்த அணி தொடக்க விக்கெட்டுக்கு எடுத்த அதிகபட்ச பார்ட்னர்ஷிப் இது தான். இதற்கு முன்பு 1999ம் ஆண்டு உலகக் கோப்பையில் பாகிஸ்தானுக்கு எதிராக மெராப் ஹூசைன் ஷாரியார் ஹூசைன் ஜோடி 69 ரன்கள் எடுத்ததே அதிகபட்சமாக இருந்தது.

★ விக்கெட் கீப்பர் முஷ்பிகுர் ரஹிம் 4 ரன் எடுத்த போது உலகக் கோப்பையில் ஆயிரம் ரன்களை எட்டிய 2வது வங்காளதேச வீரர் என்ற சிறப்பை பெற்றார். அவர் இதுவரை 33 ஆட்டங்களில் ஆடி 1,034 ரன்கள் எடுத்துள்ளார். ஏற்கனவே வங்காளதேச கேப்டன் ஷகிப் அல்ஹசன் (32 ஆட்டத்தில் 1,201 ரன்) இந்த இலக்கை கடந்துள்ளார். ★ 5வது உலகக் கோப்பை தொடரில் பங்கேற்றுள்ள 36 வயதான முஷ்பிகுர் ரஹிம், வங்காளதேச அணிக்காக அதிக உலகக் கோப்பை ஆட்டங்களில் விளையாடியவர் (33 ஆட்டம்) என்ற சாதனையும் படைத்துள்ளார்.

# புரோ கபடி லீக் போட்டி டிசம்பர் 2ந் தேதி தொடக்கம்




12 அணிகள் இடையிலான 10வது புரோ கபடி லீக் போட்டி ஆமதாபாத்தில் டிசம்பர் 2ந் தேதி தொடங்குகிறது. இதன் தொடக்க ஆட்டத்தில் குஜராத் ஜெயன்ட்ஸ்தெலுங்கு டைட்டன்ஸ் அணிகள் மோதுகின்றன. லீக் சுற்று அடுத்த ஆண்டு (2024) பிப்ரவரி 21ந் தேதி வரை நடைபெறுகிறது. பிளேஆப் சுற்று அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும் என்று போட்டி அமைப்பு குழுவினர் தெரிவித்துள்ளனர்.

லீக் சுற்று ஆட்டங்கள் ஆமதாபாத்தை (டிச.27), தொடர்ந்து பெங்களூரு (டிச.813), புனே (டிச.1520), சென்னை (டிச.2227), நொய்டா (டிச.29ஜன.3), மும்பை (ஜன.510), ஜெய்ப்பூர் (ஜன.1217), ஐதராபாத் (ஜன.1924), பாட்னா (ஜன.2631), டெல்லி (பிப்.27), கொல்கத்தா (பிப்.914), பஞ்ச்குலா (பிப்.16 21) ஆகிய நகரங்களில் நடக்கிறது. கபடி ரசிகர்களால் ஆவலுடன் எதிர்பார்க்கப்படும் இந்த போட்டியை ஸ்டார் ஸ்போர்ட்ஸ் சேனல் நேரடி ஒளிபரப்பு செய்கிறது.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.